**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானம் பெறுவனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடொன்றைச் சமர்ப்பித்து அடிப்படை வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி, அமைச்சின் அடிப்படை வருமான மதிப்பீடான ரூபா 310,000,000 ஆன பெறுமதி மாறாமல் இருந்ததுடன் ரூபா 219,000,000 ஆன உண்மையான வருமானம் திரட்டப்பட்டது. அதன்படி, திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையே ரூபா 91,000,000 வித்தியாசம் இருந்தது. இது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 29 சதவீதமாக இருந்தமையினால், அமைச்சின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் வருமானம் சேகரித்தல் என்பவற்றின் வினைத்திறனும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் தொடக்கத்தில் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 347,000,000 அறவிடப்பட வேண்டி இருந்தமையால் தொடர்புடைய வருமான மதிப்பீடுகளை திருத்த வேண்டிய அவசியமொன்று ஏற்படவில்லை. இருப்பினும் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் சேகரிக்கப்படாமையால் இந்த வேறுபாடு காட்டப்படுகின்றது. | மிகவும் சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.07.00 அரசின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 12,827,927 உம் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 124,965,567 மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 299,292,219 உம் ஆக மொத்தம் ரூபா 437,085,714 ஆன நிலுவை வருமானம் அமைச்சினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 219,195,185 ஆக இருந்ததுடன் , இந்த மொத்த நிலுவை வருமானத் தொகையில் 199 சதவீதமொன்று இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் நிலுவை வருமானத்தை சேகரிப்பதன் செயல்திறன் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் 3 பருவகாலமாக அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அனைத்துப் பருவங்களிலும் ஏற்பட்டுள்ள வருமானப் பற்றாக்குறை தொடர்பில் மாவட்ட செயலகங்களுக்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவுறுத்தல் 2023.02.20 திகதியிட்ட DFD/GPPP/MAHA/2022-2023 ஆம் இலக்க அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | வருமானக்குறியீட்டு இலக்கம் 2003.07.00 அரசின் அரசின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மீளாய்வாண்டிற்கான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 308,968,951 இல் ரூபா 9,676,732 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டிற்காக மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் 3 சதவீதமான சிறிய அளவாக இருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் சேகரிப்பின் செயல்திறன் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | 2021 நெல் பருவத்திற்கான நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் (DFD/paddy;/2021/4 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம்) 4 மாவட்ட செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு பொலன்னறுவை மற்றும் புத்தளம் ஆகிய 2 மாவட்டங்களில் இருந்தும் அத் தொகை சேகரிக்கப்பட உள்ளது. இதற்கான மேலதிக அறிவுறுத்தல்கள் 2023.02.20 திகதியிட்ட DFD/GPPP/MAHA/2022-2023 ஆம் இலக்க அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் மாவட்டச் செயலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஆணடிற்கான வருமானம் அந்த ஆண்டிற்குள் வசூலிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 69,900,000 பெறுமதியான 06 வாகனங்கள் அமைச்சில் பௌதீக ரீதியாக காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முன்னாள் இராஜாங்க அமைச்சுக்கள் விவசாய அமைச்சரவை அமைச்சுடன் இணைக்கப்பட்டதன் பின்னர் தனி அமைச்சொன்றாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, ஏனைய பிரிவுகளின் கீழுள்ள சொத்துக்களையும் சேர்ப்பதே சரியானது. மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களுடன் இணைக்கப்பட்டுள்ள வாகனங்களும் அமைச்சின் கீழ் உள்ளடங்குகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும், அடையாளம் காண வேண்டிய வாகனங்கள் தொடர்பான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. | வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த அமைச்சின் பயன்பாட்டிற்காக அல்லது ஏற்கனவே உள்ள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் பயன்பாட்டில் உள்ள வாகன இலக்கம் KS-6781 இன் மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி வாகனம் மற்றும் TP-4769 இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் உட்பட மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 179,272,000 தொகையான 16 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படவில்லை. ஆனால், அவற்றில் 12 வாகனங்களின் பதிவு உரிமை கமத்தொழில் அமைச்சின் பெயரில் காணப்படாததுடன் அவ்வாகனம் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படுவதற்கு அல்லது திறைசேரி பிரதிச் செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 2/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 15 வாகனங்களில் 06 வாகனங்கள் அமைச்சிடம் கையளிக்கப்படுகின்றன. 04 வாகனங்கள் கால்நடைப் பிரிவிற்கு உரித்தானவை என்பதால், கையேற்றலொன்று மேற்கொள்ளப்படவில்லை. 04 வாகனங்கள் தற்போதும் கமத்தொழில் அமைச்சுக்கு சொந்தமானவை. இந்த வாகனங்களில் ஒன்று கூட அமைச்சிடம் இருக்கவிலலை. | வாகனங்களின் உரிமையை கையகப்படுத்தி, நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட வேண்டும் அல்லது வாகனங்கள் ஏற்கனவே உள்ள நிறுவனங்களுக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சிற்கு சட்டப்பூர்வ உரிமை இல்லாத பெறுமதி ரூபா 24,700,000 தொகையான 07 வாகனங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருந்தன. | 07 வாகனங்களை சுவீகரிப்பதற்காக உரிய நிறுவனங்களுக்கு அதனைக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையை கையகப்படுத்த வேண்டும். |
| (ஈ) | முன்னைய இராஜாங்க அமைச்சினால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட பெறுமதி ரூபா 6,390,000 தொகையான, PG-1773 என்ற இலக்கத்தை கொண்ட வாகனத்தின் உரிமையை சுவீகரிப்பதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | SML/2/ப்ர/2/Ve.Tr/02 ஆம் இலக்க மற்றும் 2023.03.27 ஆம் திகதிய எனது கடிதத்தின் மூலம் PG-1773 வாகனத்தின் பதிவு உரிமைகளை இந்த அமைச்சிற்கு முறையாக மாற்றுவதற்கு தொடர்புடைய சுவீகரிப்பு பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் விடயப்பரப்பு தற்போது உரித்தாகின்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிமையை கையகப்படுத்த வேண்டும். |
| (உ) | அமைச்சுக்கு சொந்தமான 08 வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டமைக்கான அடிப்படை மற்றும் அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சின் பணிகளுக்காக இணைக்கப்பட்டுள்ள இரண்டு நிறைவேற்று தர அதிகாரிகள், பயன்படுத்திய இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் குழாம் வாகனமொன்று புதிய அமைச்சிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எனது இலக்கம் SML/2/ப்ர/2/Ve.Assign/III மற்றும் 2023.04.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 02 வாகனங்களையும் மீண்டும் இந்த அமைச்சிடம் ஒப்படைக்குமாறும், தொழில்துறை மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு உரிமை காணப்பட்ட மேற்படி KO – 4865 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் பதிவு உரிமையை தொழில்துறை அமைச்சிடமிருந்து விசாரித்து கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வர்த்தக,வாணிப மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>KX – 7664 - வாகனம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>KX – 8136 - வாகனத்தை மீண்டும் இந்தப் பிரிவுக்கு ஒப்படைப்பதற்கு | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களை வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கக் கூடாது. |

ஏற்பாடு செய்யுமாறு எனது SML/02/ப்ர/ Ve.Assign-அமாத்ய ஆம் இலக்க மற்றும் 2022.10.18 ஆம் திகதிய கடிதம் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

KO – 0024 - முன்னாள் கிராமப்புற பொருளாதார அமைச்சின் கீழ் அந்த அமைச்சின் செயலாளரின் MREA/2/ப்ர/2/Ve.Tr/03-1 ஆம் இலக்க மற்றும் 2018.01.09 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த ஜீப் வாகனத்தை இப்பிரிவிற்கு ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா அல்லது அ.நி.சு 01/2020 இன் பிரிவு 8 இன் கீழ் உள்ள விதிகளின்படி, வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி இந்த அமைச்சிற்கு செலுத்தப்பட்டு, வாகனத்தின் பதிவு உரிமை தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு மாற்றப்படுள்ளதா என்பது தொடர்பாக அறிவிக்குமாறு எனது SML/2/ப்ர/2/Ve.Tr/03-1 ஆம் இலக்க மற்றும் 2023.04.10 ஆம் திகதிய கடிதம் மூலம் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

CAA – 0024 – இந்த வாகனத்தை மீண்டும் இந்தப் பிரிவுக்கு ஒப்படைக்குமாறு எனது SML/2/ப்ர/2/பெவரீம/05 ஆம் இலக்க மற்றும் 2022.09.22 ஆம் திகதிய கடிதம் மூலம் மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சிற்கு எடுத்துச் செல்லப்பட்டதன் பின்னர் நிதி அமைச்சிற்கு இந்த ஜீப் வாகனம் எடுத்துச் செல்லப்படட்டுள்ளது. அதன்படி, எனது SML/2/ப்ர/2/ பெவரீம/05 ஆம் இலக்க மற்றும் 2022.11.22 மற்றும் 2022.04.06 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் இந்த ஜீப் வாகனத்தை மீண்டும் இந்த பிரிவுக்கு ஒப்படைக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
CAH – 1634 - ஜீப் வாகனம் தற்காலிகமாக நெல் விற்பனை சபைக்கு இணைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள கால்நடைப் பிரிவிற்கு சொந்தமான மொத்தப் பெறுமதி ரூபா 139,800,000 மதிப்பிலான 08 வாகனங்கள் அந்தப் பிரிவில் அல்லது அமைச்சின் வேறு பிரிவிலோ பௌதீக ரீதியாக காணப்படாததுடன் மற்றும் அவை மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தாழ்நில மற்றும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் KX 8136 என்ற இலக்கத்தைக் கொண்ட ஜீப் வாகனமும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் மாண்புமிகு நிதி இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனமொன்றுமாக CAA-0024 ஜீப் வாகனமும் பயன்படுத்தப்படுவதால் அவற்றை மீள ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் மீண்டும் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களை மீண்டும் அமைச்சுக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (எ) | அமைச்சின் கிராமியப் பொருளாதாரப் பிரிவினால் தொழில்துறை அமைச்சிற்குச் சொந்தமான KK-5865 ஆம் இலக்க வாகனம் 2019 ஜனவரி 10 முதல் பயன்படுததப்பட்டு வருகின்ற போதிலும் 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையில் அதை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முன்னாள் கிராமியப் பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டுக் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சிற்கு வாகனத்தை ஒப்படைப்பதற்கு இணங்குமாறு கைத்தொழில் அமைச்சிடமிருந்து 2021.03.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அதற்கான இணக்கப்பாடு வெளிப்படுத்தப்படவில்லை. | வாகனத்தை சுவீகரிப்பதற்கு அல்லது உரிமையை நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமானம் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி 128 (2) (ஈ), நி.பி 176 (1), 01/2015 ஆம் இலக்க 2015 ஜூலை 20 ஆம் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பந்தி 08 இன் பிரகாரம் வருமானக் குறியீடு 2003.07.00 இன் கீழ் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகள் அதன் காலக்கெடு முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் அரச நிதிக் கொள்கைப் பணிப்பாளருக்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேணடிய போதிலும், 2022 ஆம் ஆண்டு தொடர்பான அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அமைச்சின் வருமானக் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில், வருமானத் தலைப்பு 2003.07.00 இன் அரையாண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் கலைக்கப்பட்ட 03 இராஜாங்க அமைச்சுக்களின் அலுவல்கள் கமத்தொழில் அமைச்சின் கீழ் கிராமியப் பொருளாதாரப் பிரிவு, உரப் பிரிவு மற்றும் கால்நடைப் பிரிவு என இயங்கி வருகின்ற போதிலும், நிதி பிரமாணம் 135 இன் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் அதிகாரப் பகிர்ந்தளிப்பொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தமைக்கான சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த 2 பிரிவுகளில் 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியானது 03 மாதங்களின் குறுகிய காலப்பகுதியாக இருப்பதால், தற்போதுள்ள அமைச்சின் நிதி அதிகாரப் பகிர்ந்தளிப்பின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிதி அதிகாரப் பகிர்ந்தளிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் பந்தி 3.4 இன் படி, ஒவ்வொரு செலவு விடய குறியீடுகளின் கீழ் அனைத்து செலவு விடயங்களுக்குமான மொத்த நிகர ஒதுக்கீட்டிற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடு மற்றும் அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் எஸ்ஏ-2(ii) படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் அமைச்சின் எஸ்ஏ-2(ii) படிவத்தில், ஒவ்வொரு செலவு விடய குறியீடுகளின் கீழ் அனைத்து செலவு விடயங்களுக்கும் மேற்குறிப்பிட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது இரண்டு செலவு விடயக் குறியீடுகளைச் சேர்த்து மொத்த நிகர ஒதுக்கீடு, உண்மையான செலவு மற்றும் வேறுபாடு குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச கணக்கு வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் படி, ACA 2(ii) செலவின அறிக்கைக்காக வழங்கப்பட்ட படிவத்தில் கோரப்பட்ட தகவல்கள் செயற்திட்ட வாரியான செலவின அறிக்கை அல்ல, ஆனால் நிகழ்ச்சித்திட்ட வாரியான செலவு அறிக்கை ஆகும்.. எனவே, உரிய படிவத்தின்படி செலவின அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். | அரச கணக்கு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நி.பி 891(i) | பிணை வைக்கவேண்டிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் விவரங்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்படவில்லை. | பிணை வைப்புச் செய்த அதிகாரிகளின் விவரங்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள் ளது | பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி 1646 | வாகனங்களின் பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் மூலப் பிரதி மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்குரிய உத்தியோகப்பூர்வ மற்றும் குழாம் வாகனங்களின் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நிலைமை காரணமாக, அந்த ஆண்டு தொடர்பான ஓட்டக் குறிப்புக்கள் சரிபார்க்கப்பட்டு 2022 ஆம் ஆண்டிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவ தற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தத ால் 2022 ஆம் வருடத்தில் குழாம் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் குறிப்பிட்ட திகதியில் கணக்காய்விற்கு வழங்குவதில் தாமதமேற்பட்ட மையை ஏற்றுக் கொள்கின்றோம். | வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் பொழிப்பு அறிக்கைகள் குறிப்பிட்ட திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட நி.பி 770(4) மற்றும் 2020 ஒக்டோபர் 02 திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ | அமைச்சின் கால்நடைப் பிரிவில் இயங்க முடியாத நிலையில் உள்ள வாகனங்கள் 2020.12.31 இற்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் என்றும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் அல்லது மாகாண சபை நிதியத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மேற்படி வாகனங்களை அப்புறப்படுத்துவதன் மூலம் ஈட்டும் பணத்தை உரிய நிதியத்திற்கு செலவு வைக்க | 65 - 6120 ஆம் இலக்க வாகனம் 2015 செப்டம்பர் இற்கு முன்னர் காணப்பட்ட கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்து பின்னர் 2015 செப்டம்பர் முன்னாள் கிராமிய பொருளாதார அமைச்சுடன் இணைக்கப்பட்ட பிறகு (கிராமிய பொருளாதார | வாகனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கையின் இலக்கம் 02 (அ) பிரிவு | வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அகற்றும் குழுவினால் அப்புறப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தும். 2022 மார்ச் 01 ஆம் திகதி வரை அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அலுவல்கள் அமைச்சு அகற்றப்பட்டதால்) இந்த வாகனம் கிராமிய பொருளாதார அமைச்சிற்கு கீழ் வந்தது. அச்சந்தர்ப்பத்தில் இவ் வாகனம் இயங்கும் நிலையில் இல்லாதிருந்ததுடன முன்னாள் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் இந்த வாகனம் தொடர்பான கோவை ஒப்படைக்கப்பட வில்லை. வாகனம் இயங்கும் நிலையில் இருக்காமையால் அடுத்தடுத்த அமைச்சுக்களின் கீழ் இந்த வாகனம் தொடர்பான கோவைகள் எதுவும் பராமரிக்கப்பட வில்லை. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நி.பி. 94(1) இன் பிரகாரம் சேமிப்பை விஞ்சியதாக பொறுப்புகளுக்கு உடன்படுவதற்கு முடியாது என்ற போதிலும், அமைச்சின் விவசாயப் பிரிவினால் 18 செலவின விடயங்களுக்கான சேமிப்பை விஞ்சியதாக ரூபா 2,312,760,277 ஆன பொறுப்புக்களுக்கான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அடுத்து வரவிருக்கும் ஆண்டில் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பில்களுக்கான ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் முடிந்தவரை பயன்படுத்தப்படும் அளவிற்கு மட்டுமே ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஒதுக்கீடுகளை விஞ்சியதாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படக் கூடாது. |
| **(ஆ)** | விவசாயப்பிரிவின் ஆண்டுக்கான ரூபா 3,585,762 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் சேர்க்கப்படவில்லை. | தொடர்புடைய பில்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதால், அந்த பொறுப்புகளை உள்ளடக்குவதற்கு முடியாது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களை சரியாக | அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளடக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | |
| **(இ)** 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்கு வழிகாட்டியின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு (iii) இன் படி தயாரிக்கப்பட வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் அமைச்சுடன் தொடர்பான அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் சேர்க்கப்படவில்லை. | எதிர்காலத்தில் பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படுவதற்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது | அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி 371 (2) பிரகாரம் உரிய பணி முடிவடைந்தவுடன் உடனடியாக பெற்றுக் கொண்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் விவசாயப்பிரிவின் 06 உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 228,080 ஆன இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு 30 நாட்கள் தொடக்கம் 116 நாட்கள் வரையான காலப்பகுதியும் கால்நடைப் பிரிவின் 09 உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 156,024 ஆன இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு 50 நாட்கள் தொடக்கம் 240 நாட்கள் வரையான காலப்பகுதியும் எடுக்கப்பட்டிருந்தது. | இடைக்கால கட்டுநிதி வழங்கப்படும்போது உரிய பணி முடிவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக அறிவிக்கப்படுகின்றதுடன், அவ்வப்போது ஏற்படும் சிரமங்களால், சிலவற்றுக்கு தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. உரிய முற்பணங்களை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கான ஆலோசனை பெற்றுக் கொடுத்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணி முடிவடைநதவுடன் உடனடியாக இடைக்கால கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைப்பு கணக்குகளை பராமரிப்பது தொடர்பாக, உரப் பிரிவில் 2022 திசெம்பர் 31 இல் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 126,000 வைப்புத்தொகையும் கால் நடைப்பிரிவில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 440,439 ஆன வைப்புத்தொகையுமான 02 வைப்புகள் தொடர்பாகவும் நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சரவை அலுவலகத்தை புதுப்பிப்பதற்காக 2020 திசெம்பர் மாதம் Kinwes Private Limited இற்கு கொடுப்பனவு செய்யப்பட்டபோது வைப்புக் கட்டணமாக பதிவு செய்யப்பட்ட இந்தத் தொகையை செலுத்துவதற்கான பில்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. பில்கள் வழங்கப்பட்டவுடன் உடனடியாக அவை செலுதததப்பட்டு நி.பி. 571 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை | வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது கோரப்படாவிட்டால் அரச வருமானத்தில் செலவு வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்படுமென அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>இதுவரை அரச வருமானத்தில் செலவு வைக்கப்படாத ரூபா 440,439.00 தொகையை திட்டமிட்டவாறு எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு ஏற்பாடு செயயப்படும். | |

## 2.7 வங்கி கணக்கு செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் BDKBP/01/01/03-2023 ஆம் இலக்க 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் செயலிழந்த செலவினத் தலைப்புகள் தொடர்பான செயல்படாத உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதி கணக்குகளை மூடுவதற்கான பணிப்பொறுப்பு செயற்படாத அமைச்சுக்களில் பணியாற்றிய தலைமை நிதி அதிகாரி/பிரதான கணக்காளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் மீளாய்வாண்டில் செயலிழந்த செலவினத் தலைப்புகள் 407,426 மற்றும் 427 இற்கான ரூபா 50,917,244 ஆன மீதிகள் உட்பட 03 உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை இவ்வறிக்கைத் திகதி வரையில் மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முன்னைய இராஜாங்க அமைச்சுக்கள் கமத்தொழில் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டதுடன் அதன் இராஜாங்க அமைச்சுக்களை பிரிவுகளாக கமத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்துவதற்கு திறைசேரி அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, ஒரு கட்டுநிதிக் கணக்கொன்றின் கீழ் தனித்தனி பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | கலைக்கப்பட்ட அமைச்சுக்களின் வங்கிக்கணக்குகள் மூடப்பட வேண்டும். |

## 2.8 நட்டங்கள் மற்றும் கைவிடுதல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 114,343 ஆன நட்டம் இரண்டு | வாகன விபத்துக்கள் தொடர்பாக இரண்டு சாரதிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 282,371 ஆகும். அந்தத் தொகையிலிருந்து 2022.04.30 வரை ரூபா 168,028 ஆன தொகையொன்று | ஏற்பட்ட நட்டம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பான சாரதிகளிடமிருந்து அறவிடப்படவில்லை. அந்த சாரதிகள் அமைச்சரின் பதவியணியை விட்டு வெளியேறிய போதிலும், அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 17 இற்குப் பிறகு, முன்னாள் மாண்புமிகு அமைச்சருடன் இரண்டு சாரதிகளும் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறியதால் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 114,343 ஆன தொகையை அறவிடல் ஒரு சிக்கலான சூழ்நிலையாக மாறியுள்ளது. நட்டத்தை உடனடியாக செலுத்துமாறு இரண்டு சாரதிகளுக்கும் 02 கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித பதிலும் இல்லை.<br>இவ்விரு சாரதிகளும் தற்போது இலங்கையில் இல்லை எனவும், இது தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஊடாக தகவல்களைப் பெற்று எதிர்காலத்தில் ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | KY-5535 மற்றும் CAV-5064 பதிவு இலக்கங்களைக் கொண்ட 02 வாகனங்கள் விபத்துக்குள்ளானதன் காரணமாக ஏற்பட்ட ரூபா 7,982,290 ஆன நட்டமானது, அறவிடுவதற்கு அல்லது பதிவளிப்பதற்கு அல்லது வைிடுதலுக்கான நட்டம் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | KY 5535 - இந்த வாகனத்தின் ரூபா 303,971 ஆன தொகை 2021 ஆம் ஆண்டில் பதிவளித்தல் பெறுமதி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>CAV 5064 - இந்த பெறுமதி மேலும் அறவிடப்பட வேண்டிய ஆவணத்தில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>CAV 5064 - இது தொடர்பாக இன்னும் விசாரணைகள் நடந்து வருகின்றன. தவறுதலாக விடுபட்ட பெறுமதி எதிர்காலத்தில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக.கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

#### 3.1.1 வாடகை ஒப்பந்தம் முடிவுறுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 08 முதல் 2021 ஏப்ரல் 07 வரையான 05 ஆண்டுகளுக்கு கமத்தொழில் அமைச்சிற்கு தனியார் கம்பனியிடமிருந்து டீபீஜே டவர்ஸ் என்று பெயரிடப்பட்ட | ஒப்பந்தத்தின்படி, சொத்தின் உரிமை 2020 ஜனவரி 31 அன்று ஒப்படைக்கப்பட்ட பிறகு, வைப்புத்தொகை குத்தகைதாரருக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் ரூபா 63 மில்லியன் | வைப்புத்தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிட வளாகம் குத்தகைக்கு எடுக்கப்பட்டு மீண்டும் அது குத்தகை கொடுத்தோருக்கு 2020 சனவரி 31 இல் ஒப்படைக்கப்பட்டது. அமைச்சினால் அக்குத்தகை கொடுதோருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் ஆன மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புத்தொகை இதுவரை திரும்பப் பெறப்படவில்லை. மேலும் குத்தகை கொடுதோர் தரப்பினரால் இந்த வைப்புத்தொகை சட்டவிரோதமான முறையில் பிடித்து வைக்கப்பட்டு 02 வருட காலமொன்று மேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வைப்புத் தொகையை ஒப்புக்கொண்டபடி DPJ நிறுவனம் செலுத்தவில்லை என்பதுடன் , பல சந்தர்ப்பங்களில் DPJ நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டு அவர்களும் அதற்கு பதிலளித்தனர்.<br><br>ஆனால் மேற்படி தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பதால், வைப்புத் தொகையை மீளப்பெறுவதற்கு அமைச்சிற்கு சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டி நேரிட்டது.<br><br>அதன்படி சட்டமா அதிபர் திணைக்களம் DPJ நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்று 2022.11.21 ஆம் திகதிய கடிதம் மூலம் அவர்கள் ரூபா 300 இலட்சம் தொகையை செலுத்த ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த இணங்கிய தொகையை மீளப் பெற்றுக் கொள்ளுமாறும், எஞ்சிய தொகைக்கு வழக்குத் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. | |
| **(ஆ)** | குத்தகை ஒப்பந்தத்தின் முடிவில் இரு தரப்பினரின் உடன்படிக்கையுடன் சேதங்கள் பற்றிய அறிக்கையொன்று கோரப்பட வேண்டுமென்ற நிபந்தனை சம்பந்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டு இல்லாததால், அமைச்சினால் அக்குத்தகை சொத்துக்கு ஏற்பட்ட சேதம் ரூபா 12,710,236 இற்கும் குத்தகை நிறுவனத்தால் அச்சேதம் ரூபா 28,250,056 இற்கும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உரிய கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் மதிப்பிடப்பட்டு அரச மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து அறிக்கையொன்று பெறப்படுதலானது இன்று வரை தாமதமாகியுள்ளது. | குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்து கட்டிடம் கையளிப்பதற்கு முன்னர் கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் இணங்காணப்பட்டு அதற்காக சேதம் கணிப்பதற்கு பொருத்தமான நிறுவனமொன்றிற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக DPJ நிறுவனத்திற்கு அமைச்சுடன் இணைந்து அப்புலனாய்வினை மேற்கொள்வதற்காக பங்கேற்குமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்நிறுவனம் அந் நிகழ்விற்கு பங்கு பெறாமையினால், அமைச்சின் பொறியியல் பிரிவின் ஊடாக சேதம் இணங்காணப்பட்டு அதற்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டது. பின்னர் DPJ நிறுவனத்தினாலும் சேதம் கணிக்கப்பட்டு அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளமையினால் அவ் அறிக்கைகள் இரண்டிற்கும் இடையே முரண்பாடுகள் காணப்பட்டன. அதனால், இந்த கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் கணிக்கப்பட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்காக அரச மதிப்பீட்டு திணைக்களத்திற்கு முன்வைப்பதற்கு | கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் மதிப்பீட்டு திணைக்களத்தினால் சுயாதீனமாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றமையினால், அமைச்சு அல்லது DPJ நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக செலுத்தும் அபாயம் தொடர்பாக முடிவுக்கு வர முடியாதிருந்தது. | |

### 3.1.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் அறவிடப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நி.பி 485(4) மற்றும் நி.பி 113(6)(அ) பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளின் கடன் நிலுவை மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், இடமாற்றம் செய்யப்பட்டபோதிலும் 2022 திசெம்பர் 31 இல் அக்கடன் மீதியின் பெறுமதி ரூபா 229,350 ஆக இருந்தது. | அந்த நிலுவைத் தொகை தொடர்பாக விவசாயப் பிரிவின் அதிகாரியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 229,350 ஆன மீதியில் ரூபா 12,150 ஆன தொகையொன்று 2023 மே மாதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள தொகை எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவையில் இருந்து விலகிய 03 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 140,557 கடன் மீதியானது 05 வருடங்களுக்கும் மேற்பட்டதாக இருந்ததுடன் 3-4 வருடங்களுக்கு இடையிலான 04 அதிகாரிகளின் ரூபா 427,933 ஆன கடன் நிலுவைத் தொகையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையை விட்டு விலகிய வர்களுக்கான மொத்த கடன் மீதி ரூபா 140,557 ஆகும். விவசாயப்பிரிவிற்கான அதிகாரியின் கடன் மீதி தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கால்நடைப்பிரிவிற்கான அதிகாரிகளின் கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பங்கள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்தக் கடன் நிலுவைகளை கணக்குகளில் இருந்து தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.சேவையை விட்டு விலகிய 3-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைத்தொகை ரூபா 443,148 ஆகும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட 04 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 537,149 ஆன கடன் மீதி அந்த கடனாளிகளிடமிருந்தோ அல்லது உத்தரவாததாரர்களிடமிருந்தோ அறவிடப்படுவதற்கு 2022 திசெம்பர் 31 வரை தவறியிருந்தது. | இந்த கடன் மீதியில் ஒரு அதிகாரியின் ரூபா 175,714 கடன் நிலுவையை வசூலிப்பதற்காக, அவரது தனிப்பட்ட கோவையில் உள்ள முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டாலும், அவர் அந்த முகவரியில் இல்லை என்பது உறுதியானதால், பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படுள்ளது. மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் கடன் மீதியை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சிய கடன் மீதி உரப்பிரிவுடன் தொடர்புடைய 03 உத்தியோகத்தர்களுக்கான ரூபா 361,435 ஆக இருந்ததுடன் அந்த அதிகாரிகளுக்கும் கடனை மீளச் செலுத்துமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடன் மீதிகளை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 05 ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 603,099 ஆக இருந்ததுடன் அந்த கடன் நிலுவைகள் 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்கு உரியதென்பது அவதானிக்கப்பட்டது. | ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 603,099 ஆகும். ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகை இன்னும் செலுத்தப்படாததடன் ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகை செலுத்தப்பட்ட பின்னர் கடன் மீதி கணக்குப் பொழிப்புக்கள் மூலம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01/2014 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் கால்நடைப்பிரிவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு வரைபடம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி தகவல், | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டங்களின் கீழ் உள்ள ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான காலாண்டு நிதித் தேவை செயல் நடவடிக்கைத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுநிதிக்கான தேவைத் திட்டமொன்றை தனியாகச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இந்த ஆண்டு முதல், ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் செயல் | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதிக்கான தேவைத் திட்டம் மற்றும் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் அமப/20/1626/323/014 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் லங்கா உரக் கம்பனிக்குச் சொந்தமான இரசாயன ஆய்வுகூடம் தேசிய உர செயலகத்திற்கு அபிவிருத்தி செய்வதற்கு கையளிப்பதற்காக 2021 மற்றும் 2022 பாதீட்டின் மூலம் முறையே ரூபா 19 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 39 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சினால் அதன் இரசாயன அய்வுகூடத்தை கையேற்றல் அல்லது அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளாமையின் காரணமாக ரூபா 39 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது தேசிய உர செயலகத்தால் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகூட பரிசோதனைகள் தனியார் ஆய்வுகூடங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | லங்கா உரக் கம்பனிக்குச் சொந்தமான ஆய்வுகூடம் தேசிய உர செயலகத்திற்கு கையளித்ததால் ஏற்படுகின்ற பொருளாதார நலன்கள் மற்றும் கையேற்பதற்கு செவாகின்ற கிரயத்தை உள்ளடக்கி நிதி அமைச்சரால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்படும் நிறுவனம் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) அவரின் தலைமையில் குழுவொன்று சமத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தில் நியமிக்கப்பட்டிருந்தது.<br><br>லங்கா உரக் கம்பனிக்குரிய ஆய்வுகூடம் தேசிய உர செயலகத்திற்கு கையளித்தல் பொருத்தமானதாக இல்லா திருந்தமை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் மாற்றுவழியைக் கண்டறிவதற்காக 2021.09.22 ஆம் திகதி கமத்தொழில் இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் போது வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு முன் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ஒன்றிணைந்து ஆய்வுகூடத்தை நடாத்திச் செல்லும் இயலுமையை கண்டறிதல், சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்காகவும்,<br>ஆய்வுகூடத்தை நடாத்திச் செல்லும் போது சட்ட ரீதியான தேவைகளைக் கண்டறிவதற்காக உடன்படிக்கையின் வரைவொன்று கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் செயலாளர், திறன் அபிவிருத்தி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட போதும் அந்த அமைச்சிற்கு மேற்கூறப்பட்ட நிறுவனம் இல்லாதிருந்தமை அறிவிக்கப்பட்டமையால் மீண்டும் முன்னாள் இருந்த டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் தொழில் முயற்சி | லங்கா உரக் கம்பனிக்குச் சொந்தமான ஆய்வுகூடம் தேசிய உர செயலகத்திற்கு கையளிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு பிரதியுடன் செயலாளர், தொழில்நுட்ப அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அமைச்சுக்களில் ஏற்பட்ட மாற்றங்களுடன் அந்த செயற்பாடுகள் வெற்றியளித்திருக்கவில்லை. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் படி கால்நடை கட்டுப்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் 808 நலனாளிகளும், போகப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் கீழ் 15,414 நலனாளிகளும் ஆக ஒட்டுமொத்தமாக நலனாளிகளின் எண்ணிக்கை 16,222 ஆக இருந்தது. செயற்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட குறித்துரைத்த நலனாளிகளுக்கு நலன்கள் கிடைத்திருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நலனாளிகளின் பெயர் பட்டியலின் அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு துறைகளுக்காகவும் நடவடிக்கை எடுக்கின்ற உரிய மாவட்டங்களில் உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப் பட்ட நலனாளிகள் பட்டியலுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் நிதி ஏற்பாட்டை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நலனாளிகளுக்கு நிதிஏற்பாடு வழங்கும் போது தற்போது காகிதாதிகளில் காணப்படுகின்ற பற்றாக்குறையைக் கவனத்திற் கொண்டு பெறப்பட்ட உறுதிப்படுத்தல் ஆவணங்களில் பிரதிகளை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளாதிருந்ததுடன் அந்த ஆவணங்கள் உரிய பிரதேச அலுவலகங்களிடம் காணப்படுகின்றது. | குறித்துரைத்த நலனாளிகளுக்கு நலன்கள் பெறப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | கிராமியப் பொருளாதாரப் பிரிவின் மேலதிகச் செயலாளரின் 2022 யூன் 10 ஆம் திகதிய இலக்கம் 02/2022 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நலனாளி ஒருவராக உத்தேசிக்கப்பட்ட ஆண்டிற்கு அண்மித்த 02 ஆண்டுகளில் அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனங்களில் உழுந்து அல்லது பயறு பயிர்ச் செய்கைக்காக மானியம் கிடைக்கப்பெறாத குடும்பமாக இருந்தவர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட சில நலனாளிகள் 2022 ஆம் அண்டின் போது தெரிவு செய்யப்பட்டிருந்த 11 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முறை தொடர்பான ஆலோசனை எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதேச செயலகங்களுக்குரிய மாவட்ட செயலாளர்களின் மூலம் அந்த பிரதேச செயலகங்களுக்குரிய மாவட்ட செயலாளர்களின் மூலம் அந்த பிரதேச அலுவலகங்களின் விடயங்களை விசாரணை செய்வதற்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நலனாளிகளாக உத்தேச ஆண்டிற்கு அண்மித்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனங்களில் உழுந்து அல்லது பயறு பயிர்ச் செய்கைக்காக மானியம் கிடைக்கப்பெறாத குடும்பங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | கிராமியப் பொருளாதாரப் பிரிவில் 2021 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,000,000,000 ஆன 3,400 சுகாதார அலகுகளை நிர்மாணிப்பதற்கு | இந்திய அரசாங்கம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சிற்கிடையே ஆரம்ப புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு (MoU) 2018.07.19 ஆம் திகதி முதல் 2021.07.18 வரை செல்லுபடியாகும் வகையில் கையொப்பம் இடப்பட்டிருந்தது. புதிய அமைச்சிற்கு கையளிக்கப்பட்டதன் | செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை திருத்துவதற்குரிய பணிகள் 2022 இன் செயலாற்றல் அறிக்கையின் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ‘‘சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்’’ பிரிவின் நோக்கமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தைத் திருத்துவதற்குரிய பணிகள் 2022 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் முன்னைய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரல்களுக்காக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த சுகாதார அலகுகளை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைகளின் கீழ் தற்போதைய விலைகள் வேறுபடுகின்றமையின் காரணமாக எந்தவொரு நிறுவனமும் முன்வராமையின் காரணமாக தற்போதைய விலைகளைக் கவனத்திற் கொண்டு மீண்டும் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமையால் சிறிது காலம் எடுத்திருந்ததுடன் இதன் காரணமாக ஆரம்ப புரிந்தணர்வு உடன்படிக்கை கால எல்லையை விஞ்சி இருந்தது. இந்த விடயங்களின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தை அமுல் படுத்தும் இயலுமை காணப்படவில்லை.<br><br>அவ்வாறே 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்தப் பணிகள் உள்ளடக்கப்படவில்லை. | வேண்டும். |
| (உ) | கால்நடை வளப் பிரிவில் இனப்பெருக்க பண்ணை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் இனப்பெருக்க நாற்றுமேடைகள் 09 மற்றும் தனியார் இனப்பெருக்க பண்ணைகள் 25 என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் முறையே ரூபா 15,900,000 மற்றும் ரூபா 6,250,000 என்பன நிதித் தொகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் தனியார் இனப்பெருக்க பண்ணைகள் 28 நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் இனப்பெருக்க பண்ணைகள் 02 மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட அரசாங்கத்தின் 09 இனப்பெருக்க பண்ணைகளில் 02 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28 தனியார் இனப்பெருக்க பண்ணைகளும், 02 அரசாங்கத்தின் இனப்பெருக்க பண்ணைகளும் (வடக்கு மற்றும் வடமேல் மாகாணம்) ஆக ஒட்டுமொத்தமாக 30 இனப்பெருக்க பண்ணைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு குறித்துரைத்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டில் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் திட்ட முறைமையைத் திட்டமிடல் மற்றும் செயற்திட்டத்தின் பிரதான | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற் பாடுகளைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், மாகாண மட்டத்தில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல் மற்றும் நலனாளிகளைத் தெரிவு செய்தல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் இந்த செயற்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. முழு ஆண்டிற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை செலவிட்டு மீண்டும் அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் நான்காவது காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனால் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதியளவான காலம் காணப்படாமையால் அரசாங்கத்தின் இனப்பெருக்க பண்ணை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. தெற்கு, சப்ரகமுவ, மத்திய, மேல், ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கால்நடை வளப் பிரிவில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணையாளர் பாற்பண்ணை தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி மற்றும் பால் உற்பத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் மீள் திருத்தப்பட்ட பாதீட்டின் பிரகாரம் ரூபா 32,000,000 நிதி ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 93 சதவீத நிதி செயலாற்றல் கைப்பெற்றப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட 05 செயற்பாடுகள் தொடர்பாக பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளுதல் 2 இற்கும் 3 சதவீதத்திற்கும் இடையிலான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்துதல் தொடர்பாக 2022.04.26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் | 2022 இன் வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் கால்நடை வள அபிவிருத்திக்காக ரூபா 1,000,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கியதன் அடிப்படையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணை தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி மற்றம் தொகுதி பால் கிராம அபிவிருத்தி செயற்திட்டம் யாவும் சகல மாகாணத்தையும் மேவுகை செய்யும் வகையில் நாடு முழுவதும் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் போது செயற்திட்டத்தின் 05 பிரதான செயற்பாடுகளுக்குரிய இலக்குகள் 04 ஆம் காலாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அரச செலவின கட்டுப்பாடு தொடர்பாக 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. முதலாவது காலாண்டில் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் முறைமையில் திட்டமிடல், மாகாண மட்டத்தில் | செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்ட கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல், செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளைத் திட்டமிடல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |
| (எ) | கால்நடை வள அபிவிருத்தி மத்திய கால நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் அலுவலகக் கட்டிடத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 21,210,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 6,810,000 அதாவது கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கும் போது கட்டிடத்தின் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வடைந்து சென்றமையின் காரணமாக காண்பித்து ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் ஒப்பந்த உடன்படிக்கைக்கு முரணாக உடன்படிக்கையில் இரு தரப்பினர் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் யாழ்ப்பாண பிரிவின் பெறியியலாளர் கைச்சாத்திட்ட திகதி இன்றிய கடிதம் மூலம் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது மத்திய கால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த நிர்மாணத்திற்காக ரூபா 25,600,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பித்தல் முற்பணம் (வற் உடன்) ஆக ரூபா 4,878,090 மற்றும் முதலாவது பட்டியல் (வற் உடன்) ரூபா 1,941,984 வட மாகாண பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 முதலாம் காலாண்டின் போது ரூபா 6,820,000 அதாவது 32 சதவீத நிதி செயல் முன்னேற்றம் கைப்பெற்றப்பட்டிருந்தது. 2022 இன் திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் நான்காவது காலாண்டிற்குரிய இந்த நிர்மாணத்திற்காக ரூபா 21,210,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் இதுவரையிலும் இந்த நிர்மாண ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வட மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரின் 2023.04.28 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த கட்டிடத்தின் மிகுதி பகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 52,980,000 ஆன புதிய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த கட்டிடத்தை நிர்மாணிக்கும் இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 25,000,000 தொகை மற்றும் மூன்றாம் கட்டத்திற்காக ரூபா 27,980,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கால்நடை வளப் பிரிவின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழி பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நாரா அபிவிருத்தி செயற்திட்ட செயற்பாடுகளின் கீழ் 29 பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 510,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாண்வாண்டின் இறதி வரையிலும் அதில் எந்தவொரு பண்ணையும் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழி அபிவிருத்தி செயற்திட்டம் - நாரா அபிவிருத்தி செயற்திட்டம் வடமாகாணத்தின் கோரிக்கையின் படி நாரா அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூபா 510,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்குரிய வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளரால் குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணம் கோரப்பட்டிருந்த போதும் நிதி ஏற்பாடு | 29 பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்காமையின் காரணமாக இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஐ) | கால்நடை வளப் பிரிவில் பன்றி கைத்தொழில் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சுற்றாடலுக்குச் சாதகமான பன்றி பண்ணைகளை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளின் கீழ் 110 பண்ணைகளை ஸ்தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 49 பண்ணைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 37 சதவீதம் ஆகும். மேலும் செயற்திட்டத்தின் கீழ் பயிற்சியளிப்பதற்காக இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை தொடர்பாக குறிப்பிடப்படாமல் செயல் முன்னேற்றம் 10 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த அபிவிருத்தி செயற்திட்டம் 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2022 இன் மீள் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நான்காவது காலாண்டில் இந்த செயற்திட்டத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண நடவடிக்கைகள் (பன்றிக் கூடுகள், கழிவு அகற்றும் முறைமை, உயிரியல் வாயு உற்பத்தி போன்றவை) மேற்கொள்ளப்பட்டமையால் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் எழுந்த பிரச்சினைகளின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளில் 49 பண்ணைகளை மாத்திரமே பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. அதற்குரிய ரூபா 8,100,000 தொகைக்கு இடையே ரூபா 4,720,000 தொகை காசோலை மூலம் தீர்க்கப்பட்டுள்ளதுடன் ரூபா 3,420,000 ஆன காசோலைக்காக 2023 ஆம் ஆண்டின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிர்மாணிக்கப்படாத சுற்றாடலுக்கு இசைவான பன்றி பண்ணைகளில் 61 நிர்மாணிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | கால்நடை வள பிரிவில் விளைச்சலை அபிவிருத்தி செய்வதன் மூலம் மத்திய மற்றும் சிறிய அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனப்பெருக்க முகாமைத்துவம் உடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணைகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 576 பண்ணைகளை ஸ்தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதில் 100 பண்ணைகள் அதாவது 17 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அதாவது முதலாவது காலாண்டில் செயற்திட்டத்தை திட்டமிடல், மாகாணப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க செலவின கட்டுப்பாடு தொடர்பாக 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப் பட்டிருந்ததுடன் மீண்டும் இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதத்தின் போதே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதுவரையில் அநேகமான மாகாண பணிப்பாளர்கள் 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு காலம் போதியளவில் இல்லாமையின் காரணமாக விருப்பமின்மை தெரிவித்திருந்ததுடன் அதுவரையில் செயற்திட்டங்களின் நலன் பங்களிப்பை | மிகுதியான 476 பண்ணைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கி பூர்த்தி செய்துள்ள நலனாளிகளுக்கு மாத்திரம் அரசாங்கத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு வசதியீனமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டின் இறுதி வரையில் 2022 ஆம் அண்டின் செயற்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட கடப்பாட்டிற்காக ரூபா 16,800,000 இற்கான கொடுப்பனவிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.4 ஏனைய அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது காணப்பட்ட 03 இராஜாங்க அமைச்சுக்கள் கலைக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சில் உள்ளடக்கப்பட்டு அவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த 03 இராஜாங்க அமைச்சுக்களும் முன்னைய ஆண்டின் தகவல்களைக் கைவிட்டு இந்த அமைச்சின் கீழான நிதித் தகவல்களை மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதிசார் செயலாற்றல் கூற்றில் நிதிக் நிலைமைக் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் முன்னைய ஆண்டுடன் இணக்கம் செய்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கலைக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சுக்களுக்காக கணக்குகளை தீர்க்கவேண்டியுள்ள முறை தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தில் நடைபெற்ற செயலமர்வின் மூலம் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் நிதி தகவல்களுக்குரிய செலவின விடயத் தலைப்புக்களுக்கு உரியதாக மாத்திரம் வெளிப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | தகவல்கள் முன்னைய ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் கமத்தொழில் திணைக்களத்தை உள்ளடக்கிய சகல தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரால் 2009 யூன் 26 ஆம் திகதி இரசாயனப் பசளை கொள்வனவு செய்யப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய திட்டமுறைமையை உள்ளடக்கிய இலக்கம் 4/5/6 Quality என்ற கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 மார்ச் 19 ஆம் திகதி முதல் மேற் கூறப்பட்ட 4/5/6 Quality கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட முறைமை மற்றும் அதுவரை இரசாயன பசளையை பரீட்சித்து அங்கீகாரம் வழங்கப்பட்ட முறைமை மாற்றப்பட்டு இரசாயனப் பசளை விற்பனை செய்வதற்காக சந்தை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு சந்தை அங்கீகாரம் வழங்கப்பட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (i) | 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகளை முறைமைப்படுத்தும் சட்டத்தின் 12(1)(இ) மற்றும் 12(2)(1) பிரிவுகளின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பசளைகளின் மாதிரிகளைப் பெற்று மேற்கொள்ள வேண்டிய இரசாயன ஆய்வுகூடப் பகுப்பாய்வு இன்றி கொரோனா தொற்று நோய் காலத்தில் பசளைகள் கப்பலில் இடப்பட்ட சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட ஆய்வுகூட பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் சந்தைக்கு பசளைகளை விநியோகிப்பதற்கு கமத்தொழில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பசளை இலங்கையில் பகிர்ந்தளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் காண்பித்து தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரால் சகல இறக்குமதி செய்த பசளை கம்பனிகளுக்கும் 2020 மார்ச் 20 ஆம் திகதிய இலக்கம் 7/1/2/3/4 NFP என்ற கடிதமொன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. | 2020.03.03 அதிமேதகு சனாதிபதியுடன் நடைபெற்ற கூட்டத்தின் போது தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரால் அது சிறு போகத்தில் பயிர்ச் செய்கைகளுக்காக தேவையான பசளை அளவு நாட்டில் காணப்படாதிருந்தமை கூறப்பட்டிருந்ததுடன் 2020.03.05 ஆம் திகதி ‘‘பசளை பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு’’ என்ற தொனிப்பொருளில் மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் மூலம் அதிமேதகு சனாதிபதிக்கு இலக்கம் 7/1/3/1 என்ற கடிதம் மூலம் விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.<br>மேலும் மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் தலைவருக்கு 2020.03.11 ஆந் திகதி 7/1/2/3/4/NFP என்ற கடிதம் மூலம் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட சந்தை அங்கீகாரம் வழங்கப்படாத மெற்றிக்தொன் 17,000 அளவு நேரடியாக பசளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் / ஐரோப்பா சங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து Covid 19 தொற்றுநோய் நிலைமையின் இடையே உணவுப் பாதுகாப்பிற்கான தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக கலந்துரையாடப் பட்டிருந்தது.<br>Covid 19 தொற்றுநோய் நிலைமையின் இடையே தேசிய பசளை செயலகத்தின் மாதிரி பகுப்பாய்வு மேற்கொள்கின்ற ஆய்வுகூடங்கள் மூடப்பட்டிருந்ததுடன் மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய கம்பனிகளின் களஞ்சியங்களுக்கு செல்லுதல் கஷ்டமாக இருந்தமை | பசளைகளை விநியோகிப்பதற்கு முன் சட்டத்தின் பிரகாரம் பசளை மாதிரிகளைப் பெற்று மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகூடப் பகுப்பாய்வு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளாமல் அமுல்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படல் வேண்டும். |

மற்றும் ஆபத்தானதாக இருந்ததன் அடிப்படையில் நிர்வனத் தலைவராக பணிப்பாளரால் நாட்டில் உணவுப் பாதுகாப்பை பேணிச் செல்வதற்காக தொடர்ச்சியாக பசளை பகிர்ந்தளிக்கும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதாவது சனாதிபதி செயலாளரால் வெளிப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.03.19 ஆம் திகதி மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மானியமாக இரசாயனப் பசளைகள் கொள்வனவு செய்யப்பட்டு சகல கம்பனிகளுக்கும் 2020.03.20 ஆம் திகதிய 7/1/2/3/4NFP ஆம் இலக்க சர்வதேச தரப்படுத்தப்பட்ட ஆய்வு கூடத்தின் மூலம் பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் சந்தை அங்கீகாரம் வழங்கப்பட்டு பசளை பகிர்ந்தளிப்பதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகள் முறைப்படுத்தும் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பரிந்துரை செய்யப்பட்ட நியமத்தில் காணப்படும் போது அந்த நியமங்களுக்கு இணங்க பசளை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய வேண்டி இருந்த போதும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பரிந்துரை செய்யப்பட்ட நியமங்களுக்கு இணங்காத வகையில் ஐரோப்பா நியமங்களுக்கு இணங்கி TSP பசளை சந்தைக்கு விநியோகிக்ககூடிய பசளையாக கருதப்பட்டமையும் அவ்வாறான இருப்புக்கள் சந்தைக்கு விநியோகிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டு "TSP" பசளைக்கான அங்கீகாரம்" என்ற தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரால் 2020 மார்ச் 20 ஆம் திகதிய இலக்கம் 7/1/2/3/4/NFP என்ற கடிதம் ஒன்று சகல பசளைக் கம்பனிகளுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது.

ரிப்பல் சுப்பர் பொசுபேட் (TSP) பசளைகளின் உலோக அளவிற்காக ஐக்கிய நாடுகளின் / ஐரோப்பா சங்கத்தின் நியமத்தைப் பின்பற்றுவதற்கும் அடங்கியுள்ள உலோகங்களின் அளவைக் குறைப்பதற்காக கலவையாக தயாரிக்கப்பட்டு பசளை பகிர்ந்தளிப்பதற்கும் சகல நிறுவனம் மற்றும் பகிர்ந் தளிக்கின்ற இரசாயனப் பசளைக் கம்பனிக்கும் 2020.03.20 ஆம் திகதிய இலக்கம் 7/1/2/3/4/NFP என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

சட்டத்தின் பிரகாரம் பசளைகளின் மாதிரிகள் பெற்று மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (iii) | தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரால் விநியோகிக்கப்பட்ட 2020 மார்ச் 20 ஆம் திகதிய இலக்கம் 7/1/2/3/4/NFP என்ற கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு பசளை இருப்புக்களை இறக்குமதி செய்த பின்னர் தெரிவுப் பரிசோதனை மூலம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியமங்களுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தாமல் இரசாயன பசளை கப்பலில் இடும்போது பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையை மாத்திரம் கவனத்திற் கொண்டு இரசாயன பசளை மெற்றிக்தொன் 245,448 இலங்கையில் பயன்பாட்டிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | ரிப்பல் சுப்பர் பொசுபேட் (TSP) பசளைகளின் உலோக அளவிற்காக ஐக்கிய நாடுகளின் / ஐரோப்பா சங்கத்தின் நியமங்களைப் பின்பற்றுவதற்கும் அடங்கியுள்ள உலோகங்களின் அளவைக் குறைப்பதற்குமாக கலவையாக தயாரிக்கப்பட்ட பசளைகளை பகிர்ந்தளிப்பதற்கு சகல இறக்குமதி மற்றும் பகிர்ந்தளிக்கும் இரசாயனப் பசளைக் கம்பனிகளுக்கும் 2020.03.20 ஆம் திகதிய இலக்கம் 7/1/2/3/4/NFP என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் Covid 19 தொற்று நோய் பரவியமையின் காரணமாக கமத்தொழில் அமைச்சிற்குரிய அநேகமான பிரிவுகள் மூடப்பட்டு அநேகமானவற்றில் தொடர்ச்சியாக சேவையை வழங்குதல் நிறுத்தப்பட்டமையால் தேசிய உர செயலகம் அதிக பிரயத்தனத்தை கொண்டு விவசாய மக்களுக்கு தேவையான பசளைகளை பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் அடிப்படையில் நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது. | சட்டத்தின் பிரகாரம் பசளைகளின் மாதிரிகள் பெற்று மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படல் வேண்டும். |

## 4. உள்ளகக் கணக்காய்வு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று காணப்பட்டபோதிலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உபபிரிவு 40(2)(1) இன் பிரகாரம் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குள் அமைச்சின் கிராமியப் பொருளாதாரப் பிரிவிற்கு உளளக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புமாறு முன்னர் காணப்பட்ட பின்தங்கிய கிராமப்பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் RDAH&EC/Ad/02/024 ஆம் இலக்க மற்றும் 2021.11.30, 2022.01.11 திகதியிட்ட கடிதங்கள் மூலம் பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் கோரிக்கையின்றி அங்கீகரிக்கப்பட்ட உள்ளக் கணக்காய்வாளர் பதவிக்கு, பின்தங்கிய கிராமப்பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் வளாகத்தில் அலுவலக அறையொன்றை அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லாததால் அப்பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |

## 5. மனித வள முகாமைத்தவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயப்பிரிவில் சிரேஷ்ட மட்டத்தில் 12 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 06 பதவிகளும், ஆரம்ப மட்டத்தில் 20 பதவிகள் பற்றாக்குறையாகவும், இரண்டாம் மட்டத்தில் 80 பதவிகள் மிகையாகவும் அவதானிக்கப்பட்டது. | அனைத்து பதவி வெற்றிடங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிடங்கள் காணப்படுகின்ற திணைக்களப் பதவிகளுக்காகவும் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய முடியாது.<br>ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் PS/GT/2020(தொகுதி III) ஆம் இலக்க மற்றும் 2022.01.03 ஆம் திகதிய வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைத்திட்டம் - 2020, கடிதம் மூலம் அதிகாரிகளின் மிகைகை பொருட்படுத்தாமல் புதிய அபிவிருத்தி அதிகாரிகளை பணியமர்த்த ஏற்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தமையால் அந்த அதிகாரிகள் அனைவரும் சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். அதன்படி, இரண்டாம் நிலை பதவிகள் மிகையாக உள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உரப்பிரிவில் சிரேஷ்ட மட்டத்தில் 19 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 03 பதவிகளும், ஆரம்ப மட்டத்தில் 16 பதவிகளும் பற்றாக்குறையாக அவதானிக்கப்பட்டதுடன் இரண்டாம் மட்டத்தில் 269 பதவிகள் மிகையாகவும் அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் உரப்பிரிவின் (முன்னர் காணப்பட்ட சேதனப்பசளை உற்பத்தி மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குச் செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு) பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/SM/47 ஆம் இலக்க மற்றும் 2021.10.04 ஆம் திகதிய கடிதம் மூலம்<br>அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 04.10.2021 ஆம் திகதிய கடிதம் மூலம் சிரேஷ்ட மட்டத்தில் 31 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 03 பதவிகளும், ஆரம்ப மட்டத்தில் 31 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 548 பதவிகளுமாக பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | |
| **(இ)** | அமைச்சகத்தின் சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 30 பதவிகளில், சில முக்கிய பதவிகளான பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி மற்றும் உதவி/பிரதி பணிப்பாளர், பணிப்பாளர் (பொறியியல்) மற்றும் உதவிச் செயலாளர் போன்ற பதவிகளில் மிளாய்வாண்டின் இறுதி வரை ஆட்சேர்ப்பு செய்யப் படவில்லை. மேலும், கால்நடை வளங்கள் பிரிவில் மூன்றாம் மட்டத்தின் பதவியான நிர்வாகப் பணியை முறையாகச் செய்வதற்குத் தேவையான நிர்வாக அலுவலர் பதவி வெற்றிடமாகவே இருந்தது. மேலும் இரண்டாம் மட்டத்தில் ஊழியர் எண்ணிக்கையின் பற்றாக்குறை 21 உம் அவதானிக்கப்பட்டது.<br><br>2/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு 02 மாதிரியின் பிரகாரம் பதவியணியில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் உள்ளடக்கும் வகையில் மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பயிற்சி காலம் மற்றும் குறைந்தது 12 மணிநேர பயிற்சி வாய்ப்பு வழங்கப்பட்டு மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பணிப்பாளர் (திட்டமிடல்) - இலங்கை திட்டமிடல் சேவை தரம் I பதவியில் உள்ள அதிகாரி 2022.02.28 ஆம் திகதி சேவையிலிருந்து பின்னர் கல்வி அமைச்சில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>உதவி/பிரதி பணிப்பாளர் -இலங்கை விவசாய சேவையில் தரம் lll/ll பதவி இப்பிரிவிற்கு தொடர்ந்தும் தேவையில்லை என்பதால் அப்பதவியை இணைக்கப்படுவதற்கு 2022.12.23 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் (பொறியியல்) - இலங்கை பொறியியல் சேவையில் தரம் l பதவிக்கு இன்று வரை எந்த அதிகாரியும் நியமிக்கப்படவில்லை. இந்த பிரிவின் விடயப் பரப்பிற்கு, அப்பதவிக்கு உரிய குறிப்பிடத்தக்க அளவிலான பணிகள் இல்லை என்பதே இதற்குக் காரணம். இது MREA/2/2/9/1-1 ஆம் இலக்க மற்றும் 2020.09.180 ஆம் திகதிய விவசாய அமைச்சின் செயலாளரின் கடிதம் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்பதவியை ஒழிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.<br><br>உதவிச் செயலாளர் (இலங்கை நிர்வாக சேவை-தரம் lll/ll ) பதவி வெற்றிடமாக உள்ளதாக எனது MREA/2/2/9/25(ll) இலக்க மற்றும் 2020.06.25 ஆம் திகதிய கடிதம் மூலம் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கும், SML/2/2/இ.நி.சே (பொது) மற்றும் 2020.09.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கும் இதற்கு முன்னா தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூன்றாம் மட்டத்தில் நிர்வாக அலுவலர் பதவிக்கு அதியாரியொருவரை நியமிக்காதது நிர்வாக பணிகளை முறையாகச் செய்வதில் தாக்கமளிப்பதனால் அப்பதவிக்கு வெற்றிடம் காணப்படுவதாக MREA/2/2/9/25(ll) kw;Wk; 2020.06.25 ஆம் திகதிய கடிதம் மூலம் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அந்த பதவிக்கு எந்தவொரு அதிகாரியும் நியமிக்கப்படவில்லை.<br><br>சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணையில் இரண்டாம் மட்டம் தொடர்பான பதவியணி தகவல்கள் 2021.12.31 அன்று கீழ்க்கண்டவாறு சரியாக இருக்க வேண்டும். அதன்படி, 2021 ஆம் ஆண்டில் இரண்டாம் மட்டத்திலான வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆகும். | |
| (ஈ) | கிராமியப் பொருளாதாரப் பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவில் 2022 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 83 ஆக இருந்தபோதிலும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 188 ஆக இருந்தது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை ஹதபிம அதிகாரசபையானது இந்த இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படல் மற்றும் இராஜாங்க அமைச்சின் விடயப்பரப்பை மேம்படுத்துவதன் அடிப்படையில் இந்த அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளரின் RDAH/DP/05/006 ஆம் இலக்கம் மற்றும் 2021.10.12 ஆம் திகதிய கடிதத்தில் 375 பட்டதாரிகள் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளமையால் முன்னாள் பின்தங்கிய கிராமப்பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் RDAH&EC/Ad/02/014 மற்றும் 2021.10.14 ஆம் திகதிய கடிதத்தில் 375 பட்டதாரிகள் தேவையென தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. அதன்படி, இந்த அமைச்சிற்கு 116 அதிகாரிகள் 2022.01.03 முதல் நியமிக்கப்பட்டனர். அன்றுவரை இப்பிரிவில் பணியாற்றிய, 2020 இல் பட்டதாரி ஊழியர்களின் தேவைக்கேற்ப பணியமர்த்தப்பட்ட மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களில் பணிபுரியும் அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட 2022.12.31 இல் கிராமிய பொருளாதார பிரிவில் அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை 157 ஆகும். | தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(உ)** | கிராமியப் பொருளாதாரப் பிரிவில் 2022 திசெம்பர் 31 இல் தலைமை நிதி அதிகாரி, தலைமைக் கணக்காளர், தலைமை உள்ளகக் கணக்காய்வாளர், பணிப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | கமத்தொழில் அமைச்சின் கிராமியப் பொருளாதாரப் பிரிவில் தலைமை நிதி அதிகாரி 60 வயதை எட்டியதால் பொது நிர்வாக சுற்றறிக்கை 19/2022 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2022.12.31 முதல் ஓய்வு பெற்றார்.<br>தலைமைக் கணக்காளர் பதவியின் கடமைகளை முழு நேர அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>தலைமை உள்ளகக் கணக்காய்வாளர பதவியை நிரப்புமாறு முன்னாள் பின்தங்கிய கிராமப்பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் RDAH&EC/Ad/02/023 மற்றும் 2022.01.11 ஆம் திகதிய கடிதம் மூலம் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக செயற்படும்போது ஊழியர்களைப் பராமரிக்கும் அதே வேளையில் கிராமியப் பொருளாதாரப் பிரிவிற்கான பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிகள் உட்பட 11 பதவிகளை ஒழிப்பதற்கு கமத்தொழில் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஊ)** | கிராமப் பொருளாதாரப் பிரிவில் இரண்டாம் மட்டத்தில் அபிவிருத்தி அலுவலர்கள் பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 28 ஆக இருந்தாலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியாளர்களின் எண்ணிக்கை 157 ஆகும். இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை மிகைத்து 129 அபிவிருத்தி அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | முன்னாள் காணப்பட்ட பின்தங்கிய கிராமப்பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தற்போது கமத்தொழில் அமைச்சின் கீழ் கிராமிய பொருளாதாரப் பிரிவாக செயல்பட்டு வருகிறது.மேற்படி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களில், தற்போது பிரிவின் கீழ் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணைத்துக்கொளவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |